பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 25 புதன்கிழமை 17.09.2025 கதிர் 311

### இனி இது ரகசியம் அல்ல!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கொழும்பு திரும்புவதற்கு வசதியாக அவருக்கு ஒரு வீடு தேடும் படலம் தீவிரமாக நடக்கிறது. ஏற்கனவே நான்கு இடங்களைத் ☞ 2

## தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ்வதானால் தமிழ், முஸ்லிம் மக்களின் இணைவு அவசியம்

### மு.கா. பெருந் தலைவர் அஷ்ரவ் நினைவுப் பேருரையில் சுமந்திரன் தெரிவிப்பு

இலங்கையில் எதிர்காலத்தில் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்துதான் செயற்படவேண்டும். அந்த இணைவு எமது தனித்துவ அடையாளங்களை அழித்து விடுவதாக இல்லாமல், அவற்றை உறுதி செய்வதாக இருக்கவேண்டும் என்று தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன்.

முஸ்லிம் காங்கிரஸின் பெருந்தலைவர் அஷ்ரப் நினைவுப் பேருரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அம்பாறை மாவட்டம், நிந்தவூரில் இந்தப் பேருரை நேற்று இடம்பெற்றது. சுமந்திரன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பெருந் தலைவர் கௌரவ அஷ்ரவின் 20ஆவது நினைவு தினப் பேருரையை 20ஆம் ஆண்டு சம்மாந்துறையில் நிகழ்த்தியிருந்தேன். இன்று அன்னாரது 25ஆம் ஆண்டு நினைவு தினத்தில் நினைவுப் பேருரை நிகழ்த்துமாறு எனக்கு அழைப்பு விடுத்த கௌரவ ரவுவ் ஹக்கிம் அவர்களுக்கும் ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ☞ 6

## மகிந்த ராஜபக்ச மட்டுமே ஆளும்தரப்பின் இலக்கு

### அவரை நான் பார்த்துக்கொள்வேன் வாயை மூடுங்கள் - நாமல்

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச மாத்திரம் இலக்குவைத்து அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகளை நீக்கும் சட்டமூலம் கொண்டு வரப்பட்டது. எனது தந்தையை நான் பார்த்துக்கொள்வேன். இவ்விடயம் பற்றி ஆளும்தரப்பு இனிப் பேசுவது பயனற்றது. முன்னாள் அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகளை நீக்கியதால் மிகுதியான நிதியைக் கொண்டு அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகளை ☞ 6

# மாகாண சபைத் தேர்தலை உடனடியாகவே நடத்துங்கள்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

முந்தைய ஆளும்தரப்பால் ஆரம்பிக்கப்பட்ட காணி அபகரிப்பு திட்டத்தை தற்போதைய ஆளும்தரப்பு அங்கீகரித்து, திருகோணமலை முத்துநகர் விவசாய நிலங்களைபன்னாட்டுநிறுவனங்களுக்குவழங்கியுள்ளது. மாகாணசபைத் தேர்தலை இப்போதே நடத்துங்கள். அதில் மக்கள் சிறந்த பாடத்தை புகட்டுவர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவத்தார்.

திருகோணமலை மாவட்டம் முத்து நகர் கிராம விவசாயிகளின் காணிப் பிரச்சினையை ஆராயும் நோக்கில் அப்பிரதேசத்திற்கு நேற்று நேரில் சென்று பார்த்தபோது இதனைத் தெரிவித்தார். விவசாயிகள் மத்தியில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தகரவேட்டவொன், மத்தியவெளி, முத்து நகர் ஆகிய மூன்று கிராமங்களிலும் 350 குடும்பங்களைச் சேரந்த, 1000 பேருக்கு மேற்பட்டோர், 1972 ஆம் ஆண்டு முதல் 53 வருடங்களாக, 800 ஏக்கர் காணியில் நெல், சோளம், வெண்டைக்காய், தர்பூசணி ☞ 2

## மன்னார் மணல் திட்டுகளிலிருந்து 6 பேர் கடற்படையினரால் மீட்பு

இலங்கைக் கடற்படையினர் செம்டெம்பர் 13 தலைமன்னார், மணல்திட்டு கடல் பகுதியில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாகக் கடத்தப்பட்டு கடல் வழியாக அழைத்து வரப்பட்ட பின்னர் ஆட்கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டனர் என்று சந்தேகிக்கப்படும் ஆறு பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

கடல் வழிகள் வழியாக சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மனித கடத்தலைத் தடுக்க, தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய வழக்கமான தேடல் நடவடிக்கைகள் மற்றும் ரோந்துப் பணிகளை கடற்படை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, வட மத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பலான தம்மென்னாவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், தலைமன்னாரின் மணல் திட்டுகளைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த சிறப்பு நடவடிக்கையின் போது, அங்கு, தலைமன்னாரில் உள்ள ஏழாவது மணல் திட்டில் நீரிழப்பு காரணமாக கடுமையானஉடல்நலப்பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டஆறுபேர்இனங்காணப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது கடற்படையினரால் மீட்கப்பட்ட நபர்கள் 8 முதல் 56 வயதுக்குட்பட்ட வவுனியா, மடு மற்றும் கொக்கடிச்சோலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என ☞ 6

### முன்னாள் அரசுத் தலைவர்களின்

## செலவுகள் குறித்த ஆளும்தரப்பின் தரவுகள் அனைத்துமே பொய்யாம்

முன்னாள் அரசுத் தலைவர் என்ற ரீதியில் தனக்காக 2024ஆம் ஆண்டில் ஒரு கோடிக்கும் அதிக நிதி செலவிடப்பட்டுள்ளதாக அண்மையில் ஆளும்தரப்பால் வெளியிடப்பட்டுள்ள தரவுகள் உண்மைக்குப் புறம்பானவை என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் செல்லவுள்ள வீட்டின் நிர்மானப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை நிறைவடைந்த பின்னர் வெகு ☞ 6

## அரச சேவையில் டிஜிட்டல் ஒப்பம்

அரச உத்தியோகத்தர்களின் உத்தியோக பூர்வ கடமைகளை இலகுபடுத்துவதையும் வினைத்திறனாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு, அரசசேவையில்டிஜிட்டல்கையொப்ப முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரச சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்தி புதிய பாதைக்கு இட்டுச் செல்வதே ஆளும்தரப்பின் நோக்கம் என பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள்பிரிவில்உள்ளஅரச ☞ 2

## வெளிநாடு வாழ் இலங்கையரும் இனி வாக்களிக்க வசதியாக சட்டத் திருத்தம்

### அமைச்சரவை அனுமதி வழங்கியது

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர் களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கும் வகையில், தேர்தல் சட்டங்களில் திருத்தம் செய்ய அல்லது புதிய சட்டத்தை உருவாக்க ஒரு குழுவை நியமிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. பொது நிர்வாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசமைப்பின் 3ஆவது மற்றும் 4ஆவது உறுப்புரைகளின்படி, மக்கள் இறைமை அதிகாரம் தேர்தல் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தற்போதைய தேர்தல் சட்டங்களின்படி, இலங்கையில் வசிக்கும் மற்றும் வாக்காளர் பட்டியலில் பெயர்பதிவு செய்துள்ள குடிமக்களுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை உள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் போன்ற பல ஆசிய நாடுகள், வெளிநாடுகளில் வாழும் தங்கள் குடிமக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க சட்டங்களை வகுத்துள்ளன. அதைப்போலவே இலங்கையிலும் இந்தச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

அதற்கமைய வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பிரஜைகளின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக தற்போதுள்ள சட்டத்தை திருத்தம் செய்ய அல்லது ☞ 2

### மறுசீரமைப்புச் சட்டத்தை எதிர்த்து

## மின்சார சபை தொழிற்சங்கத்தினர் இன்றும் நாளையும் சுகவீன விடுப்பு

### 21 ஆயிரம் பேர் போராட்டத்தில்

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றும் நாளையும் நாடளாவிய ரீதியில் உள்ள மின்சார சபை தொழிற்சங்கங்கள் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளன.

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று புதன்கிழமை நாளை வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களும், நாடு முழுவதும் உள்ள மின்சார சபை தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து சுகயீன விடுமுறை ☞ 2

## இனி இது .....

தேர்ந்தெடுத்துப் பார்த்துள்ளனர், ஆனால் இன்னும்பொருத்தமானவீடுகிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. தனிக் குழு ஒன்று வீடுகளைத்தேடிவருகிறது. அவரது பாதுகாப்புத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான வீடாக வேண்டும் என்பதால் தேடுதல் தொடர்கிறதாம்.

தூதர்கள் உள்ளிட்ட இராஜதந்திரிகள், சிறப்புப் பிரமுகர்கள் தொடர்ந்தும் மகிந்தவைச் சந்தித்து வருவதால் இந்தச் சந்திப்புக்களுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான சூழலில் வீடு தேவையாக இருக்கிறது என்று கட்சியின் செயலாளர் காரியவாசம் தெரிவித்தார்.

போதுமான மற்றும் பொருத்தமான சாலை வசதிகள் உள்ள பகுதியில் ஒரு வீட்டைத் தேர்ந்தெடுப்பதே தேவையாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். விரைவில் அது கண்டுபிடிக்கப்படும் என்றும் அதன் பின்னர் மகிந்த கொழும்பு திரும்புவார் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர்களின் உரிமைகளை ஒழிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்ச கொழும்பு, விஜேராம மாவத்தையில் உள்ள அரச இல்லத்தை விட்டு வெளியேறி தங்காலையில் உள்ள கார்ல்டன் வீட்டிற்குச் சென்றார். அவர் இன்னும் அங்கேயே தங்கி இருக்கிறார்.

.................................

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வை முன்வைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் தரப்புகளும் உற்சாகத்துடன் கடந்த சில வாரங்களாகத் துள்ளிக் குதித்து வந்தன. ஆனால், அவர்களின் கடிதங்கள், கையெழுத்துக்கள், போராட்டங்கள் என்று எல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் உயராணையரின் அறிக்கையிலோ உத்தேச தீர்மான வரைவிலோ எதிரொலிக்கவில்லை என்பதால் கடந்த சில நாட்களாக இந்த விடயத்தில் அவை சோர்ந்து போய்விட்டன. நடிகர் வடிவேலுவின் காட்சிகளில் வருதைப்போன்று "படுத்தேவிட்டார்களையா" என்ற நிலையில் இருந்த இந்தத் தரப்புக்களை மீண்டும் உற்சாகப்படுத்தக் கூடிய வகையில் நேற்று ஒரு அறிக்கை வந்திருக்கிறது.

பலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் பாலஸ்தீனர்களுக்கு எதிராக இனப்படுகொலை செய்துள்ளது என்று கிழக்கு ஜெருசலேம் உட்பட இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசத்திற்கான ஐ.நாவின் சுயாதீன சர்வதேச விசாரணை ஆணையம் நேற்று ஒரு புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இனப்படுகொலையை முடிவுக்குக் கொண்டு வந்து அதற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றும் அதற்கான கடமையை நிறைவேற்றுமாறு இஸ்ரேல் உட்பட அனைத்து நாடுகளிடமும் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

2023 ஒக்டோபர் 7 அன்றும் அதற்குப் பிறகும் நடந்த நிகழ்வுகளை ஆணையம் கடந்த இரண்டு ஆண்டுகளாக விசாரித்து வந்தது, அதன் முடிவுப்படி இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுப்பது மற்றும் தண்டிப்பது தொடர்பாக 1948இல் மாநாட்டால் வரையறுக்கப்பட்ட ஐந்து இனப்படுகொலைச் செயல்களில் நான்கை இஸ்ரேலிய அதிகாரிகளும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளும் செய்தன என்று ஆணையகம் முடிவு செய்துள்ளது, அதாவது கொலை செய்தல், கடுமையான உடல் அல்லது மன ரீதியான தீங்கு விளைவித்தல், பாலஸ்தீனியர்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கக் கணக்கிடப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை வேண்டுமென்றே ஏற்படுத்துதல் மற்றும் பிறப்புகளைத் தடுக்கும் நோக்கில் நடவடிக்கைகளை விதித்தல் ஆகிய நான்கு இனப்படுகொலைக் குற்றங்களும் நிகழ்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய பொதுமக்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் வெளிப்படையான அறிக்கைகள் மற்றும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் நடத்தை முறை, இனப்படுகொலைச் செயல்கள் காசா பகுதியில் உள்ள பாலஸ்தீனியர்களை ஒரு குழுவாக முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டன என்பதைக் குறிக்கின்றன என்று அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இதில் முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டியது இந்த ஆணையத்தின் தலைவராக இருந்தவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையராக முன்னர் பதவி வகித்தவரான நவிப் பிள்ளை. தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இவர் தமிழ் வம்சாவழிப் பின்னணியைக் கொண்டவர், இலங்கைக்குத் தனது பதவிக் காலத்தில் வந்தபோது மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் வேண்டுமென்றே அவமதிக்கப்பட்டவர்.

'இனப்படுகொலை மாநாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களை பூர்த்தி செய்யும் செயல்கள் மூலம் காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களை அழிக்கும் நோக்கம் உள்ளது என்பது தெளிவாகிறது. இந்தக் குற்றங்களுக்கான பொறுப்பு, காசாவில் இனப்படுகொலைப் பரப்புரையைத் திட்டமிட்டு வரும் உயர் மட்டத்தில் உள்ள இஸ்ரேலிய அதிகாரிகளே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வழக்கம்போலவே இந்த அறிக்கையையும் இஸ்ரேல் அரசு நிராகரித்துள்ளது. இருந்தாலும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்ததும் இனப்படுகொலைதான் என்ற கருத்தை சர்வதேச மட்டத்தில் உயர்த்திப் பிடித்து நிறுவ விரும்பும் தமிழ்க் கட்சிகளுக்கு இது ஒரு உற்சாகம் தரும் விடயம். இஸ்ரேல் செய்தது இனப்படுகொலை என்றால், இலங்கை அரசு செய்தது என்ன? என்ற ரீதியில் கண்டன அறிக்கைகளைப் பறக்க விடுவதற்கு இது உதவும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாண....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்றவற்றைப் பயிரிட்டு வருகின்றனர்.

2023 ஆண்டு முதல் பயிர்செய்கையில் ஈடுபட்டுவருவோருக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுப் பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கமைய 2025 பெப்ரவரி மாதத்திலிருந்து 800 ஏக்கரில் 53 ஆண்டுகளாக விவசாயம் செய்து வந்த விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

1972 ஆம் ஆண்டு முதல், பல்வேறு சந்தர்ப்பங்களில், இந்தப் பகுதி மக்கள் பல மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களைச் சந்தித்து இந்தக் காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குமாறு கோரியிருந்த போதிலும், அதனை வழங்காது நிராகரித்துள்ளனர்.

50ஆண்டுகளுக்கும் மேலாக பயிரிடப்பட்டு வரும் இந்த பயிர் செய்கை நிலம், துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான காணி என உரிமை கோரி, 200 ஏக்கர் காணியை, சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையங்களை நிறுவ பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனால் 53 வருடங்களாக பயிர் செய்து வந்த விவசாயிகள் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். சூரிய சக்தியை ஊக்குவிப்பதற்கு நான் எதிரானவன் அல்ல, ஆனால் 800 ஏக்கர் விவசாய காணியில் 200 ஏக்கர் காணியை அபகரித்து, சூரிய சக்தி திட்டங்களுக்கு வழங்க எடுத்த நடவடிக்கைக்கு எதிர்ப்பை தெரிவிக்கிறேன்.

சூரிய மின்சக்தி திட்டங்களை முன்னெடுப்பதற்குப் போதுமான நிலப் பரப்பு இருக்கத்தக்க, இந்த 350 குடும்பங்களை இலக்கு வைத்து, அவர்களினது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த காணிகளை அழித்து, சூரிய மின்சக்தி திட்டங்களுக்கு ஒதுக்குவது கடுமையான அநீதியான செயலாகும். அவ்வாறே காணிக்கான உரிமை மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு காணப்படும் உரிமைகளை இது திருடும் செயலாகவும் அமைந்து காணப்படுகின்றது.

இந்த காணிக்கான உரிமை விவசாயிகளுக்கே காணப்படுகின்றது. இந்த சூரிய மின் சக்தி திட்டத்திற்கு இடத்தை ஒதுக்கி, விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவது மோசமான விடயமாகும். இந்த விவசாயிகள் பல்வேறு அரசாங்கங்களில் இருந்து உர மானியங்கள், விவசாய கடன்கள் போன்றவற்றையும் பெற்றுள்ளனர்.

இந்த காணிகளை வழங்கிய முந்தைய அரசாங்க தரப்பினரோடு சேர்ந்து, தற்போதைய ஆளும் தரப்பைச் சேர்ந்தோரும் நிலத்தை கொள்ளையடித்துள்ளனர். கடந்த தேர்தல் காலத்தில், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விவசாய காணிகளை பாதுகாத்து தருவதாக தெரிவித்திருக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகள் தொடர்பான பல்வேறு நிகழ்வுகளில் தற்போதைய ஆளும் தரப்பினர் பங்கேற்று, ஆராய்ந்து ஆசிர்வதித்துள்ளனர். இவ்வாறு விவசாயிகளுக்கு சொந்தமான விளைநிலங்களை, முந்தைய ஆளும்தரப்பு போலவே தற்போதைய அரசாங்கமும் காணி அபகரிப்புக்கு இடமளித்துள்ளன. பாடசாலை, கோயில், பள்ளிவாசல் போன்றவை கூட இங்கு அமைந்து காணப்படுகின்றன. முத்து நகர் குளமும் முற்றாக தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. ஏனைய குளங்களையும் கிட்டிய காலத்தில் தரைமட்டமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமது செல்வத்தையும் அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி காணிகளை இவ்வாறு கொள்ளையடிக்க இடமளிக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி எமது ஆளும் தரப்பின் கீழ் இந்த காணிகளை மீட்டித்தருவோம். பயிரிடப்படாத தரிசு காணிகளில் சூரிய ஆற்றல் திட்டத்தை முன்னெடுக்க முடியும். பயிரிடப்பட்ட காணிகளை இத்தகைய நோக்கத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது. விவசாய காணிகளை அபகரித்து சூரிய ஆற்றல் சக்தி திட்டத்தை முன்னெடுக்கக் கூடாது.

குறைந்தபட்சம் நீர்ப்பாசன வசதிகளுடன் கூடிய மாற்று காணிகளை இவர்களுக்கு ஆளும்தரப்பு வழங்கியிருக்க வேண்டும். ஆளும்தரப்பிடம் இதற்கான இயலுமை காணப்பட்டிருந்தபோதிலும், இதனை ஆளும்தரப்பு செய்யவில்லை. வழக்குகளைப் பதிவு செய்து, பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்தி விவசாயிகளை மிரட்டி வருகின்றனர். எனவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க ஆளும்தரப்பு முன்வர வேண்டும்

350 குடும்பம் தானே. 1000 பேர் தானே, இது சிறிய தொகையினர் தானே என்று சிலர் கருதலாம். எமக்கு எத்தனை குடும்பம் என்ற அளவு முக்கியமில்லை. இந்நாட்டில் எப்பகுதியிலேனும் எங்கேனும் வாழும் மக்களுக்கு ஏதேனும் அநீதி நடந்தால் முற்போக்கு எதிர்க்கட்சியாக நாம் அங்கு நிற்போம். நாம் உங்களோடு நிற்போம். நாம் இவ்வாறு மக்கள் மத்தியில் வந்து பிரச்சினைகளை கேட்டறிவதற்கு பலர் ஏளனம் செய்தனர்.

கடந்த அரசுத் தலைவர் தேர்தலில் திருகோணமலை மாவட்ட மக்கள் எமக்கு மகத்தான வெற்றியை ஈட்டித் தந்தனர். அதனை நாம் ஒருபோதும் மறந்துவிட மாட்டோம். நிச்சயமாக உங்களது காணிப் பிரச்சினைக்கு நாம் அன்றும் முன்நின்றோம். அன்றும் போராடினோம். இன்றும் போராடி வருகிறோம். நாளையும் போராடுவோம்.

இப்பிரதேசத்தை சேர்ந்த ஆளும் தரப்பு எம்பிக்கள் உங்கள் மத்தியில் வந்து என்ன கூறினர். முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வருவோம் என கூறினரல்லவா? ஆனால் பழைய பாதையிலயே பயணிக்கின்றனர். 2023 ஆம் ஆண்டு இந்த காணிகளை அபகரிக்கும் கொள்கையிலயே இவர்களும் பயணிக்கின்றனர். இரட்டை நாக்கு பேச்சுக் களைப் பேசவேண்டாமென ஆளும்தரப்பிடம் கூறுகிறோம். இரட்டை நாக்கு செயல்பாட்டில் ஈடுபடவேண்டாமென கூறுகிறோம். இப்பிரதேச மக்களினது காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகளை கைவிடுமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## மின்சார சபை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளதாக தெரிவித்துள்ளன. அந்த வகையில் மின்சார சபையின் 28 தொழிற்சங்கங்களை சேர்ந்த சுமார் 21 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் இன்று முதல் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையை தொடங்கவுள்ளனர்.

அதேவேளை இலங்கை மின்சாரசபையை நான்கு பாகங்களாக பிரிப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட சட்டப்படி வேலை செய்யும் செயற்பாட்டை மேலும் தீவிரப்படுத்துவதாக இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் சங்கத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்தார்.

எமது கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் 21ஆம் திகதிக்கு பின்னர் பாரிய தொழிற்சங்க போராட்டத்துக்கு செல்வோம் என இலங்கை மின்சாரசபை சுதந்திர சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சாரசபையை நான்கு பாகங்களாக பிரிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, மின்சாரசபை தொழிற்சங்கங்கள் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை ஆரம்பித்து, அதன் முதற்கட்டம் நேற்றுடன் முடிவடைந்துள்ள நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மின்சார சபையை 4 பாகங்களாக பிரிக்கும் ஆளும்தரப்பின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சட்டப்படி வேலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முதலாவது நடவடிக்கை நேற்றைய தினத்துடன் முடிவடைந்தது. இன்று முதல் அதன் இரண்டாம் கட்டத்துக்கு செல்வதற்கு எமது சங்கம் தீர்மானித்திருக்கிறது.

என்றாலும் குறித்த தொழிற்சங்க செயற்பாடு காரணமாக மக்களை அசௌகரியத்துக்கு ஆளாக்க நாங்கள் எதிர்பார்ப்பதில்லை. என்றாலும் குறித்த தொழிற்சங்க போராட்டத்தின் மூலம் அரசாங்கத்துக்கு உணரக்கூடிய வகையில் மேற்கொள்ள திட்டமிட்டிருக்கிறோம்.

அதன் பிரகாரம் எதிர்வரும் தினங்களில் தொழிலில் ஈடுபடுவதற்கு மேலதிகமாக கேள்விகோரல் குழுவில் தொடர்பு படுதல், ஏனைய குழுக்களில் இருந்து நீங்கிக்கொள்வதற்கு இதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதன் மூலம் குறித்த தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தும் செய்தியை அரசாங்கத்துக்கு அறிவிக்கிறோம்.

அத்துடன் இன்று மற்றும் நாளைய தினத்தில் அனைத்து ஊழியர்களும் இரண்டு குழுக்களாக சுகயீன விடுமுறை அறிவிப்பதற்கு இருக்கிறோம். இந்த இரண்டு தினங்களிலும் ஆளும்தரப்பால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைக்கு எதிராக எதிர்ப்பு போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யவும் தீர்மானித்திருக்கிறோம்.

குறித்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அலுவலகங்கள் மூடப்படுதல் அல்லது வேறு எந்த நடவடிக்கைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாது என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை மின்சாரசபை சுதந்திர சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் பிரபாத் பிரியன்த தெரிவிக்கையில், ஆளும்தரப்பின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இன்றும் நாளையும் மின்சாரசபை 21ஆயிரத்தி 800 ஊழியர்களையும் ஒன்றிணைத்து, கொழும்பில் பாரிய போராட்டம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிட்டிருக்கிறோம். செப்டெம்பர் 21 கடந்த பின்னர் எந்தவொரு தினத்திலும் பணி புறக்கணிப்புப் போராட்டத்துக்குச் செல்லவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றார்.

## அரச....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர்களுக்கான டிஜிட்டல் முறை கையொப்பங்களை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும் நிகழ்வில் திங்கட்கிழமை கலந்துகொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் ஒரு வினைத்திறன்மிக்க அரச சேவையை உருவாக்குவதே தனது நோக்கம் எனவும், இந்த தொழில்நுட்பத்தை கிராம அலுவலர்களுக்கும் விரிவாக்கவேண்டும் எனவும் அமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.

இந்த முயற்சிக்கு அமைவாக, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் இல. 19, 2006 இன் ஏற்பாடுகளின் கீழ் உள்நாட்டலுவல்கள் பிரிவின் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள அதிகாரிகளின் கையொப்பங்களை இலக்கமயமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சட்டத்துக்கு அமைவாக, டிஜிட்டல் முறைமை கையொப்பங்களை வழங்குவதற்கான அதிகாரியாக லங்கா பே நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய முறைமை உத்தியோகபூர்வ கடிதப் பரிமாற்றங்களைச் செயற்படுத்துவதில் ஏற்படும் தாமதங்களைக் குறைத்து, விரைவான, மிகவும் வினைத்திறன் மிக்க, பயனுள்ள அரச சேவையை வழங்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாடு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய சட்டத்தைத் தயாரிப்பதற்கான விடயங்களை ஆராய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்படும். இந்தக் குழுவில் தேர்தல்கள் ஆணைக்குழு, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, பொதுநிருவாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொடர்புடைய ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள் இடம்பெறுவர் என அமைச்சரவை பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் அரசுத் தலைவர்களின் இல்லங்கள் பொருளாதாரப் பயனுள்ளவை ஆக்கப்படும்

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

அரசுத்தலைவர்களுக்குரியசிறப்புரிமைகளை நீக்குவதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின் கீழ் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். முன்னாள் அரசுத் தலைவர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் பொருளாதார ரீதியில் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத்தலைவர்களுக்குரியசிறப்புரிமைகளை நீக்குவதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்துக்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். 1994ஆம் ஆண்டு அமைச்சராக பதவியேற்ற நாள் முதல் தற்போது வரை சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களிலேயே வாழ்ந்திருக்கின்றனர். இவ்வாறானவர்கள் தான் தம்மால் இவற்றிலிருந்து செல்ல முடியாது எனக் கூறிக் கொண்டிருந்தனர்.

ஆனால் இவர்கள் அனைவருக்கும் கொழும்பில் இல்லங்கள் உள்ளன. அவர்கள் பரம்பரை பரம்பரையாக உத்தியோகபூர்வ இல்லங்களில்வாழ்வதற்கு அடிமையாகியுள்ளனர். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கே மக்கள்எமக்கு ஆணையைவழங்கியிருக்கின்றனர். எம்மால் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த பொது சட்டத்தின் கீழ் தற்போதைய அரசுத் தலைவர்க்கான சிறப்புரிமைகளும் நீக்கப்பட்டுள்ளன. மக்கள் இதனைப் புரிந்து கொண்டிருக்கின்றனர்.

முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சட்ட நிறுவனமொன்றின் ஊடாக குறித்த இல்லத்திலிருந்து வெளியேறுவதற்கு கால அவகாசம் கோரியிருக்கின்றார். சிலர் இல்லத்திலிருந்து வெளியேறிருந்தாலும் பொருட்களை ஒப்படைக்கவில்லை. இவர்கள் முழுமையாக வெளியேறியதன் பின்னர் அந்த இல்லங்களை எவ்வாறு பயன் மிக்கதாக பயன்படுத்துவது என்பது குறித்து அவதானம் செலுத்தப்படும். அவற்றின் பெறுமதி, சந்தைப் பெறுமதி என்பவற்றை கணித்து பொருளாதார ரீதியில் நன்மை கிடைக்கும் வகையில் அவை பயன்படுத்தப்படும்.

பெரும்பாலான அரச நிறுவனங்கள் பல மில்லியன் வாடகையை கட்டடங்களுக்காக செலுத்திக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான நிறுவனங்களை இவற்றுக்கு மாற்ற முடியுமா என்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. முன்னாள் அரசுத் தலைவர்களான கோட்டாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை இராஜதந்திரிகள் அவர்களது தனிப்பட்ட இல்லங்களிலேயே சந்திக்கின்றனர். எனவே ஏனைய முன்னாள் அரசுத் தலைவர்களையும் இராஜதந்திரிகள் எவ்வாறு சந்திப்பர் என்பது பிரச்சினையல்ல என்றார்.

# போதைப் பொருள் விவகாரத்தையும் ராஜபக்சக்கள் மீது சுமத்தவே முயற்சி

## நாமல் குற்றச்சாட்டு

சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரத்தில் சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சொல்வது உண்மையா, பொலிஸ்மா அதிபர் சொல்வது உண்மையா என்பதை ஆளும்தரப்பு பகிரங்கப்படுத்த வேண்டும். போதைப்பொருள் விவகாரத்தையும் ராஜபக்சர்கள் மீது சுமத்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறதென ஸ்ரீ லங்கா பொதுஜன தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை இலக்கு வைத்து குறிப்பாக எமது கட்சியின் உறுப்பினர்களை இலக்கு வைத்து ஆளும்தரப்பு முறையற்ற வகையில் செயற்படுகிறது. அண்மையில் தெற்கு மாகாணத்தில் கண்டுப்பிடிக்கப்பட்ட போதைப்பொருள் பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கமும் இதனை தனது அரசியலுக்கு பயன்படுத்திக் கொள்கிறது.

இந்த கொள்கலன்கள் சுங்கத்தில் இருந்து தான் விடுவிக்கப்பட்டுள்ளது.வானத்தில் இருந்து ஒன்றும் விழவில்லை. ஆகவே இந்த கொள்கலன் விடுப்பு தொடர்பில் ஆளும்தரப்பு பொறுப்புக்கூற வேண்டும்.

சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரத்தில் சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சொல்வது உண்மையா, பொலிஸ்மா அதிபர் சொல்வது உண்மையா என்பதை ஆளும்தரப்பு பகிரங்கப்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களுக்கும்,ராஜபக்சர்களுக்கும் தொடர்புண்டு என்று ஆளும்தரப்பு தேர்தல் மேடைகளில் குற்றஞ்சாட்டியது.ஆனால் இதுவரையில் அந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

தற்போது போதைப்பொருள் விவகாரத்துக்கும் ராஜபக்சர்களுக்கும் தொடர்புண்டு என்று குறிப்பிடப்படுகிறது. குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை போன்று அவற்றை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனப்படுகொலைக்கு எதிரான ஐ.நாவின் பொறுப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன சர்வதேச விசாரணைக் குழு நேற்று வெளியிட்ட அதிர்ச்சிகரமான அறிக்கை, இஸ்ரேல் காசாவில் மேற்கொண்ட நடவடிக்கைகள் இனப்படுகொலையே என்று உலகிற்கு தெளிவாக அறிவித்துள்ளது.

1948ஆம் ஆண்டின் இனப்படுகொலை தடுப்பு மற்றும் தண்டனை ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்ட ஐந்து வகையான செயல்களில் நான்கினை இஸ்ரேல் நிகழ்த்தியுள்ளது என்று குழு சுட்டிக்காட்டியுள்ளது. உயிரைக் கெடுப்பதும், உடல் மற்றும் மனதிற்கு தீவிர சேதங்களை உண்டாக்குவதும், ஒரு சமூகத்தின் வாழ்வாதாரத்தை அழித்து அவர்களை அழிவுக்குத் தள்ளுவதும், பிறப்பைத் தடுக்கின்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பது குற்றச்சாட்டின் ஆதாரமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை, காசாவில் நடந்த கொடூரங்களை மட்டுமின்றி, அந்தச் செயற்பாடுகளின் நோக்கம் தெளிவாக இனப்படுகொலைக்கான டேலஸ் ஸ்பெசாலிஸ் (dolus specialis – கொல்லும் குறிப்பிட்ட நோக்கம்) என நிரூபிக்கிறது. அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்ட உரைகள், காசா மக்களை முழுமையாக அழிப்பதே அவர்களின் நோக்கம் என்பதை வெளிப்படையாகக் காட்டுவதாகக் குழு முடிவுக்கு வந்துள்ளது.

இது உலகளாவிய சட்டமும் நெறிமுறையும் எவ்வாறு மீறப்பட்டுள்ளன என்பதற்கான சான்று. ஆனால், இவ்வளவு தெளிவான ஆதாரங்கள் இருப்பினும், இதற்கெதிரான பன்னாட்டுச் சமுதாயத்தின் நடவடிக்கை மிகவும் மெதுவானதும் பலவீனமானதுமாகவே உள்ளது. “அமைதியாக இருப்பதே குற்றத்தில் பங்கெடுப்பதாகும்” என்ற குழுத் தலைவர் நவி பிள்ளையின் வார்த்தைகள் உலக சக்திகளின் பாசாங்கையும் செயலற்ற தன்மையையும் சுட்டிக்காட்டுகின்றன.

இச்சம்பவம் இலங்கை மக்களுக்கும், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் போரின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கும் புதிய எதிரொலிகளை ஏற்படுத்துகிறது. 2009 இல் இலங்கை அரசும் அதன் இராணுவமும் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக பல சர்வதேச அமைப்புகள் பெருமளவில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாகவும், மனிதாபிமான குற்றங்கள் நிகழ்த்தப்பட்டதாகவும் மீண்டும் மீண்டும் எச்சரித்தன. அப்போதைய தாக்குதல்களும், பொதுமக்களை விலக்கி வைப்பதற்கான முறையற்ற முறைகளும், மருத்துவமனைகள் மற்றும் அடைக்கலங்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களும், உணவுப்பொருட்கள் மற்றும் மருந்துகளுக்கான தடைகளும் உலகளாவிய விமர்சனத்தை பெற்றன.

ஆனால் இன்று வரை, அந்தச் சம்பவங்கள் இனப்படுகொலையா என்பதைப் பற்றி ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகம் தெளிவான நிலைப்பாடு எடுக்கத் தயங்குகிறது. பாலஸ்தீன மக்களுக்காக இப்போது வெளிப்படுத்தப்படும் உறுதியான சொற்கள், இலங்கையின் போரின்போது உயிரிழந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் நீதி தேடலை மீண்டும் நினைவூட்டுகின்றன.

ஐ.நா. இன்று காசா மக்களின் படுகொலைக்கான சட்டப்பூர்வ உண்மையை ஏற்றுக்கொள்கிறது என்றால், அதே சட்ட அடிப்படையில் இலங்கையிலும் நடந்த குற்றச்செயல்களை ஆராய்ந்து இனப்படுகொலை என அங்கீகரிக்கவேண்டும். மனித உரிமைகளுக்கு உலகளவில் ஒரே தரக்கோல் இருக்க வேண்டுமே தவிர, அரசியல் சூழ்நிலை, புவியியல் நலன் அல்லது பெருநாடுகளின் அழுத்தங்கள் அடிப்படையில் அது மாறக்கூடாது.

சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்பதே ஐ.நா. சாசனத்தின் அடிப்படை. எனவே, ஐ.நா. காசா தொடர்பான கண்டனங்களை வெளிப்படுத்துவதோடு மட்டுமின்றி, இலங்கையில் நடந்த குற்றங்களையும் அதே தீவிரத்துடன் விசாரித்து, இனப்படுகொலைக்கான அடையாளங்களை உறுதி செய்ய வேண்டும். இது பாதிக்கப்பட்ட மக்களின் நீதி தேடலுக்கும், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட குற்றங்கள் நிகழாமல் தடுக்கவும் அவசியமாகிறது.

இஸ்ரேலுக்கான ஆயுத விற்பனையை உலக நாடுகள் நிறுத்தவேண்டும் என்ற குழுவின் பரிந்துரை மிகுந்த பொருத்தமுடையது. அதேபோல், இலங்கையிலும் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட இராணுவ உதவிகளும், பயிற்சிகளும், குற்றங்களைச் செய்ய உதவிய நாடுகளின் பொறுப்பும் மறக்கப்படக்கூடாது. ஆயுதங்களை வழங்கிய நிறுவனங்களும் அரசுகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

இன்றைய உலகில் இனப்படுகொலை என்பது இனி “அடையாளம் தெரியாத குற்றம்” அல்ல. அது தொலைக்காட்சித் திரைகளில், இணையத்தில், நேரடி சாட்சியங்களின் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ள உண்மை. அப்படியிருக்க, “எங்களுக்கு தெரியவில்லை” என்று உலக சக்திகள் கூறும் நாட்கள் முடிவடைந்துவிட்டன.

ஐ.நாவின் காசா அறிக்கை, உலகிற்கு ஒரு மிகப்பெரிய எச்சரிக்கை மணி. ஆனால், அந்த மணி ஒலிப்பது பாலஸ்தீனர்களுக்காக மட்டுமல்ல. இலங்கையிலும், சூடானிலும், ருவாண்டாவிலும், மியான்மாரிலும் ஒலிக்கிறது. உலகின் சக்திகள் இனப்படுகொலைக்கு எதிராக உண்மையான நடவடிக்கை எடுக்காவிட்டால், மனிதகுலத்தின் வரலாற்றில் “நீதியற்ற காலம்” என்ற முத்திரையை இட்டுவிடும் அபாயம் உண்டு.

இப்போது தேவையானது — சட்டத்தின் அடிப்படையில் சீரான அணுகுமுறை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி, குற்றவாளிகளுக்கு தண்டனை, மற்றும் இனப்படுகொலை என்ற பேரழிவை எதிர்காலத்திற்குத் தடுக்கும் உறுதியான உலக நடவடிக்கை.

# மாகந்துரே மதூஷுக்கு நேர்ந்த கதி கெஹல்பத்தரே பத்மேவுக்கு நேராது

### தொழில் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய 80 அரசியல்வாதிகளின் பெயர் விவரங்களை மாகந்துரே மதூஷ் முன்னாள் அரசுத் தலைவர் கோட்டபய ராஜபக்சவுடன் பகிர்ந்திருந்தார். ஆனால் எவ்வித விசாரணைகளையும் முன்னெடுக்காமல் மதூஷ் கொலை செய்யப்பட்டார். மதூஷிற்கு நேர்ந்த கதி கெஹல்பத்தரே பத்மேவுக்கு நேராதென தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மித்தேனிய பகுதியில் அண்மையில் கண்டுப்பிடிக்கப்பட்ட ‘ஐஸ்’ போதைப் பொருள் மூலப்பொருளுக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெருமுனவின் உறுப்பினருக்கும் இடையில் தொடர்புண்டு. பெயர் விவரங்கள் வெளியானதன் பின்னரே கட்சிக்கும் அந்த நபருக்கும் இடையில் தொடர்பில்லை என்று பொதுஜன பெரமுன அறிவிக்கிறது.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களில் பலர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு இன்றும் சிறையில் உள்ளார்கள். அவர்களின் கட்சி உறுப்புரிமை நீக்கப்படவில்லை. ஆனால் பொது ஜன பெரமுனவின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரின் கட்சி உறுப்புரிமை அவசரமாக நீக்கப்பட்டுள்ளது.

தம் மீது குற்றமில்லையாயின் அவர் தலைமறைவாக இருக்கவேண்டிய அவசியம் கிடையாது. சம்பத் மனம்பேரி தலைமறைவாகியுள்ளாரா அல்லது தலைமறைவாக்கப்பட்டுள்ளாரா என்பதிலும் சந்தேகம் காணப்படுகிறது. பாதாள குழுக்களின் பிரதான உறுப்பினர்கள் கைது செய்யப்படுகின்ற நிலையில் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தற்போது கலக்கமடைந்துள்ளார்கள்.

பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய 80 அரசியல்வாதிகளின் பெயர் விவரங்களை மாகந்துரே மதுஷ் முன்னாள் அரசுத் தலைவர் கோட்டபய ராஜபகசவுக்கு அறிவுறுத்தியுள்ளார். ஆனால் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. உண்மை வெளிப்படுத்தப்படவில்லை. மாகந்துரே மதூஷ் கொல்லப்படுகிறார். அத்தோடு பல விடயங்கள் மூடி மறைக்கப்பட்டன.

கொலைசெய்யப்பட்ட மாகந்துரே மதூஷிற்கு நேர்ந்த கதி கெஹல்பத்தரே பத்மேவுக்கு நேராது என்பதை உறுதியாக குறிப்பிட முடியும். விசாரணைகளில் வெளியாகும் பல விடயங்களை கொண்டு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க போவதில்லை என்றார்.

# மின்சார சபை ஒருபோதுமே தனியார் மயமாக்கப்படாது

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

இலங்கை மின்சார சபை எந்தச் சந்தர்ப்பத்திலும் தனியார் மயமாக்கப்படாது. அதன் செயற்றிறனை மேம்படுத்தவும், நுகர்வோருக்கு கட்டணச் சலுகைகளை வழங்கவும், இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றவும் மட்டுமே மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மின்சாரசபை எந்தச் சந்தர்ப்பத்திலும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது. மின்சாரசபையின் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்காகவும், மின் பாவனையாளர்களுக்கு மின் கட்டணத்தில் சலுகைகளை வழங்குவதற்காகவும், மின்சாரசபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்குமான மறுசீரமைப்புக்கள் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மாத்திரமே முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய மின்சாரசபை 6 அரச நிறுவனங்களாக மாற்றப்படும். அவை திறைசேரி செயலாளர் வசம் பங்குகள் உள்ள நிறுவனங்களாகவே இருக்கும். அவற்றில் 4 நிறுவனங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. எஞ்சிய இரு நிறுவனங்கள் தற்காலிகமாகவே நிறுவப்படும். மாற்றங்களை ஏற்படுவதற்காக மாத்திரமே அவை நிறுவப்படும். மின் உற்பத்தி, விநியோகம் உள்ளிட்ட சேவைகள் சார்ந்த அனைத்து நிறுவனங்களும் ஆளும்தரப்பு வசமே காணப்படும்.

இந்தச் செயற்திட்டம் தொடர்பில் மின் சக்தி அமைச்சர், மின்சாரசபைத் தலைவர், நுகர்வோர் அதிகாரசபை யென பல தரப்பினர் தொழிற்சங்கங்களுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றனர். அவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் இருந்திருக்குமானால் அவற்றுக்கு பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு கண்டிருக்க முடியும். இவ்வாறு நிறுவனங்கள் உருவாக்கப்படும் போது அவற்றில் பணியாற்ற விருப்பமில்லாதவர்கள் 9 - 50 இலட்சம் வரையான இழப்பீட்டைப் பெற்றுக் கொண்டு சேவையிலிருந்து விலகிக் கொள்ளவும் முடியும்.

மாற்று வழிகள் பல வழங்கப்பட்டுள்ளன. மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான பணிகள் தொடர்பில் புரிந்து கொண்டு அவற்றுடன் இணங்கி ஆளும்தரப்புடன் பணியாற்றவும் முடியும். அவ்வாறில்லை எனில் இழப்பீட்டைப் பெற்றுக் கொண்டு பணியிலிருந்து விலகிக் கொள்ளவும் முடியும். கடந்த ஆளும்தரப்பே மின்சாரசபையை தனியார் மயப்படுத்தவிருந்தது. எமது ஆளும்தரப்பு முன்னெடுத்திருப்பது அத்தியாவசிய மறுசீரமைப்பு பணிகள் மாத்திரமே. எனவே தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு செல்வது பிரயோசனமற்றது. பிரச்சினைகள் காணப்படுமானால் பேச்சு ஊடாக அவற்றுக்கு தீர்வு காண முடியும் என்றார்.

# சீனத் தூதுவர் ஜென் ஹொங் மைத்திரியை சந்தித்துப் பேச்சு

இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஜென் ஹொங் முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று செவ்வாய்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து இருவரும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. அரசுத் தலைவர்களுக்குரிய சிறப்புரிமைகளை நீக்கும் சட்டம் நாடாளு மன்றத்தில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மு;னனாள் அரசுத் தலைவர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

அதற்கமைய முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச விஜேராம இல்லத்திலிருந்து செல்ல முன்னர் சீனத் தூதுவர் அவரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அத்தோடு முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்திருந்தார். இந்நிலையில் நேற்று முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரியையும் அவர் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்டதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மகிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு குறைக்க வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமானநாமல்ராஜபக்சதெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனானகலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது தனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவை மாத்திரம் இலக்காக் கொண்டு அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகள் நீக்கப்பட்டன. ஏனைய முன்னாள் அரசுத் தலைவர்கள்எவரும்ஆளும்தரப்புக்குசவாலாக இருக்கவில்லை. அவர்கள் ஆளும்தரப்புடன் இணக்கமாகவே செயற்பட்டார்கள்.

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச அதிகாரத்தில் இல்லாவிடினும் மக்கள் மனதில் உறுதியாகவுள்ளார். செயற்பாட்டு ரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்ச்சியான சந்திப்புக்களில் ஈடுபட்டார். மகிந்த ராஜபக்ச தமக்குப்பெரும்சவாலாகஅமைந்துவிடுவாரோ என்ற அச்சத்தில் தான் ஆளும்தரப்பு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

எமதுதந்தையைஎம்மால்பார்த்துக்கொள்ள முடியும். முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச பயங்கரவாதப் போரை முடிவுக்கு கொண்டு வந்தார். அதன் அச்சுறுத்தல் அவருக்கு இன்றும் உள்ளது. ஜேவிபியைப் போன்று எம்மிடம் ஆயுதப்படை இல்லை. ஆகவே முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு தொடர்பில் நாங்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

எனது தந்தையை நான் பார்த்துக் கொள்வேன். இவ்விடயம் பற்றி ஆளும்தரப்பு இனி பேசுவது பயற்றது. முன்னாள் அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகளை நீக்கியதால் மிகுதியான நிதியை கொண்டு அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகளை ஆளும்தரப்பு குறைக்க வேண்டும். அரசியல்வாதிகள்தொடர்பில்மக்கள் மத்தியில் தவறானதொரு நிலைப்பாட்டை ஏற்படுத்தியே இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. அதன் பெறுபேறு ஆளும்தரப்புக்கு நிச்சயம் கிடைக்கும் என்றார்.

## செலவுகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் இந்த வீட்டை ஆளும்தரப்பிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்வேன் எனத் தெரிவித்த அவர், பொலன்னறுவைக்கு செல்ல விரும்பினாலும் கொழும்பில் தங்கியிருக்க வேண்டியேற்பட்டுள்ளது. அரசுத் தலைவராக பதவி வகித்த போது பொலன்னறுவையிலிருந்தே ஆட்சி செய்தார் எனவும் தெரிவித்தார்.

இந்த வீட்டிலிருந்து செல்வதில் எனக்கு எந்தக்கவலையும் இல்லை. முன்னாள் அரசுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளைத் தவிர மேலும் பல அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட வீடுகள் இந்த ஆளும்தரப்பால் மீளப் பெறப்பட்டாலும், அவை பயன்பாடின்றி கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளன. தற்போது அவற்றில் குரங்குகள்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

முன்னாள் அரசுத் தலைவர்களுக்கான செலவுகள் தொடர்பில் ஆளும்தரப்பால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளை நான் சிறிதளவேனும் கவனத்தில் கொள்ளவில்லை. அவை முற்று முழுதாக போலியான தரவுகளாகும். பாதுகாப்பு செலவுகளைக்கூட அவர்கள் எமது செலவாகக் குறிப்பிட்டுள்ளனர். உலகின் ஏனைய நாடுகளில் முன்னாள் அரசுத் தலைவர்களுக்கு எவ்வாறான பாதுகாப்புக்களும் கௌரவமும் வழங்கப்படுகிறது என்பதை ஆளும்தரப்பினர் பார்க்கவேண்டும்.

எனது ஆட்சி காலத்தில் மாகந்துரே மதுஷ் உள்ளிட்ட முக்கிய பாதாள உலகக் குழுவினரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றேன். நான் தற்போது ஓய்வூதியத்தைக் கொண்டே வாழ்கின்றேன். எனக்கு வேறு எந்த வருமான மூலமும் இல்லை. நான் உயிர் வாழும் வரை சுதந்திரக் கட்சி அங்கத்தவனாகவே இருப்பேன். அரசியலில் இருந்தாலும் இனி செயற்பாட்டு அரசியலில் ஈடுபட மாட்டேன் என முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

## தன்மானத்தோடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்ஜனாதிபதிசட்டத்தரணிகௌரவநிஸாம் காரியப்பர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியில் இன்னமும்பரஸ்பரசந்தேகங்களும்நெருடல்களும் தொடர்ந்தும் நிலவி வருகிற காலத்தில் ஐந்து ஆண்டு கால இடைவெளிக்கும் பிறகு இரண்டாவது தடவையாக தமிழ் சமூகத்தைச் சேர்ந்த எனக்கு விடுக்கப்பட்ட இந்த அழைப்பை பெரும் கௌரவமாகவே நான் கருதுகிறேன். புட்டும் தேங்காய்ப் பூவுமாக வாழ்கிறோம் என்று மார் தட்டிக் கொள்ளும் (நீத்துப் பெட்டி அல்ல, குழல் புட்டு) எமது சமூகங்களின் உறவு, என்றுமில்லாதவாறு இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆகையால் அந்த தலைப்பிலேயே இந்த நினைவுப் பேருரையை ஆற்றலாம் என்று எண்ணினேன். அதுவே பெருந் தலைவர் அஷ்ரவுக்குச் செய்யும் உயரிய அஞ்சலியாகவும் கருதுகிறேன்.

தமிழ்-முஸ்லிம் உறவு என்பது அந்த இரு சமூகங்களுக்கும் உயிர் வாயு (oxygen) போன்றது. முழு நாட்டின் சூழ்நிலைக்கும் இது பொருத்தமானது என்றாலும், அதன் வெற்றியோ தோல்வியோ கிழக்கிலே, அதுவும் அம்பாறை மாவட்டத்திலேயே நிச்சயப்படுத்தப்படும் என்பதை பெருந்தலைவர் அஷ்ரவ் நன்கு அறிந்திருந்தார். தமிழ் பேசுகிற முஸ்லிம் மக்களுக்கு தனியான ஒரு அரசியல் அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் அவர்தான். ஆனால் அதே சமயத்தில் தமிழ் மக்களோடு பின்னிப்பிணைந்த ஒரு அடையாளத்தையே அவர் உருவாக்கிக் கொடுத்தார். அதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உண்டு:

ஒன்று, தாய்மொழி என்கிற ஆழமான அடையாளம். ‘தமிழ் பொதுவுடமை’ என்ற கவிதையிலே மார்ட்டின் லூதர் கிங் ஜப் போல, ‘கனவொன்று கண்டேன்..’ என்று ஆரம்பித்து ஏழுதிய கவிதையிலே அஷ்ரவ் அவர்கள் இதை எவ்வளவுக்கு அழுத்திக் கூறியிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. அது மட்டுமல்ல, தான் ஒரேயொரு ஆங்கிலக் கவிதை எழுதியதாகவும் ஆனால சமூகத்துடன் எனது தாய் மொழியான தமிழில் தொடர்பு கொள்வது எனக்குப் பெரும் நிம்மதியைத் தருகிறது என்றும் எழுதியிருக்கிறார். அரசியல் கண்ணாடியூடாகப் பார்த்தாலும் உலகெங்கும் மொழி என்பதே அரசியல் ஆட்புலங்களை நிர்ணயம் செய்கிறது என்பது புலப்படும். உலக வரைபடத்தில் நாடுகளின் அரசியல் எல்லைகளை அவதானித்தால் இது தெளிவாகப் தெரியும். ஐரோப்பா இதற்கு நல்ல உதாரணம். தாய்மொழி அடிப்படையிலேயே சகல நாடுகளும் பிரிந்திருக்கின்றன. தனித்தனி நாடுகளாகப் பிரியாவிட்டாலும், சுவிஸ்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின் போன்ற நாடுகளில் சமஷ்டி அலகுகள்மொழிஅடிப்படையிலேயேபிரிக்கப்பட்டு உள்ளன. எமது அண்டை நாடான இந்தியாவிலும் மொழிவாரியான மாநிலங்கள் (linguistic states) என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஆட்சி அலகுகள் அமைந்துள்ளன. இதற்கான காரணத்தை இலகுவாகக் கண்டு கொள்ளலாம். சமுக வாழ்விற்கு மொழி இன்றியமையாதது. ஒரு மொழி இல்லாமல் ஒரு அரசியல் அலகாக இயங்க முடியாது. மக்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தி சம்பாஷித்து கலந்துரையாடி தங்களைத்தாங்களே ஆழுவதையே ஜனநாயகம் என்கிறோம். இதைச் செய்வதற்கு மொழி இன்றியமையாதது. மொழிபெயர்ப்போடு செய்யப்படும் கலந்துரையாடலையும் ஒரே மொழியில் நிகழும் சம்பாஷனையையும் ஒப்பிட முடியாது. அதுவும் ஆட்சி அதிகார விடயங்களில் மொழிபெயர்ப்பில் தங்கியிருப்பது ஆபத்தில் கூட முடியலாம். இலங்கை நாட்டில் இரண்டு தாய்மொழிகள் வழக்கத்தில் உள்ளன. ஆகவே அரசியல் அலகுகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இந்தப் பிரதான பிரிவு முக்கியத்துவம் பெறுகிறது.

இரண்டாவது, தமிழ் மொழி பேசும் மக்கள் இந்த நாட்டிலே எண்ணிக்கையில் சிறுபாண்மையானவர்கள். தமிழ், முஸ்லிம் என்ற இரு சமூகங்களை சேர்த்துக் கணக்கிட்டாலும் பெரும்பாண்மை சமூகத்தவர் எம்மை விட எண்ணிக்கையில் மூன்று மடங்கானவர்கள். அப்படியானதொரு சூழ்நிலையில் நாம் கூடியவரை சேர்ந்து இயங்குவதுதான் தமிழ் பேசும் இரண்டு சமூகங்களுக்கும் பாதுகாப்பானது. அப்படியாக நாம் சேர்ந்து இயங்கும்போது எமக்கிடையில் உள்ள வேறுபாடுகளையும் மதித்து அவற்றையும் எமது தனியான அடையாளங்களையும் ஏற்றுக் கொண்டு இயங்க வேண்டும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, இந்த நாட்டின் ஆட்சி முறை சமஷ்டியாக மாற்றப்பட வேண்டுமென்று கோரி தனிக் கட்சியாக உருவெடுத்த போதே ‘ஒரு சுயாட்சி தமிழ் அரசும்’ ஒரு ‘சுயாட்சி முஸ்லிம் அரசும்’ நிறுவ வேண்டும் என்று இரண்டு அலகுகளாக எமது கட்சி யாப்பில் ‘நோக்கம்’ என்ற தலைப்பின் கீழ் விதி 2 இலேயே கூறியுள்ளது. சில நாட்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் தர்மலிங்கத்தின் நினைவு நாளில் நான் கூறியபடி, 1971ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் எமது கட்சியின் மாதிரி ஆரசியல் யாப்பை முன் வைத்தபோதும், இதே எண்ணத்தின் அடிப்படையிலே ஐந்து சமஷ்டி அலகுகளாக நாடு பிரிக்கப்பட வேண்டும் என்றும் அந்த ஐந்தும்,

1. தெற்கு, மேற்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

2. வட மத்திய, வட மேல் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

3. மத்திய பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

4. வட, வட கிழக்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

5. தென்கிழக்கு பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

என்றும் இருந்ததை நான் நினைவுபடுத்தியிருந்தேன். இதே கோட்பாட்டின் அடிப்படையிலேதான்பெருந்தலைவர்அஷ்ரவுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பின்னைய நாட்களில்ஏற்பட்ட இணக்கப்பாட்டின்ஒருதெரிவாக தென்கிழக்கு அலகு இருந்தது. அதைக் குறித்து அஷ்ரவ் அவர்கள் தினகரன் வாரமஞ்சரிக்கு 1998ஆம ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி கொடுத்த நேர்காணலில் இப்படிக் கூறியிருக்கிறார்.

அஷ்ரவ் அவர்கள் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளிலே ‘அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழம் பெற்றுத் தராவிட்டாலும் தம்பி அஷ்ரவ் அதைப் பெற்றுத் தருவான்’ என்று முழங்கியது எவரும் அறிந்ததே. ஆனால் அந்த தேர்தல் முடிவுகள், முஸ்லிம் மக்கள் தனி நாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை என்பதை அவருக்கு உணர்த்தியபோது அவர் அந்த ஜனநாயகத் தீர்ப்பை ஏற்றுப் பயணிக்க ஆரம்பித்தார். இன்று தமிழ் மக்களும் அவர்களது தலைவர்களும்கூட அதே நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

இதிலே விசித்திரமான உண்மையொன்று என்னவென்றால், அந்த தேர்தலுக்குப் பின் ஜே. ஆர். ஜயவர்த்தன, தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்ற தொகுதிகளில் கிடைத்த வாக்குகள் வடக்கு கிழக்கில் 50% இற்கு குறைவானதால் தனி நாட்டுக்கான ஆணை கிடைக்கவில்லை என்று கூறியபோது, அமிர்தலிங்கம், கிழக்கிலே முஸ்லிம் பெரும்பாண்மை தொகுதிகளிலும் புத்தளத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி தோற்றிருந்தாலும், அங்கு பெற்ற 26,496 மொத்த வாக்குகளையும் சேர்த்து 50% தாண்டியதாக காட்டியிருந்தார். இதிலேயும், தொகுதிகளிலே தோற்றிருந்தாலும், அஷ்ரப்பின் பரப்புரையின் பயனாகவே எமக்கான ஆணையைக் காட்டக் கூடியதாக இருந்தது என்பதை நாம் மறக்க கூடாது.

2000 ஒகஸ்ட் 3, சந்திரிகா அம்மையார், பெயரில் இல்லாவிட்டாலும் உள்ளடக்கத்தில் சமஷ்டியை ஒத்த புதிய அரசமைப்பு ஒன்றை பிரேரித்தபோது, நாடாளுமன்றத்தில் $\frac{2}{3}$ பெரும்பாண்மை கிடைக்கிற வரைக்கும் பேசுமாறு பணிக்கப்பட்டு, 5 டி மணி நேரம் அஷ்ரவ் அவர்கள் உரையாற்றியதை எவரும் மறக்க முடியாது. அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கு ஆதரவு வழங்கியிருந்தால் இன்று அப்படியான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உள்ளடங்களான ஆட்சி முறை இருந்திருக்கும்.

தந்தை செல்வா என்று நாம் அன்போடு அழைக்கும் எமது கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எமக்கு மட்டும் தலைவரல்ல. பெருந் தலைவர் அஷ்ரவுக்கும் தந்தை செல்வாதான் தலைவர். இந்தக் கவிதைகள் அதற்குச் சான்று:

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, முஸ்லிம் மக்கள்பெரும்பாண்மையாகஇருந்ததொகுதிகளில் முஸ்லிம் வேட்பாளர்களையே நிறுத்துவார்கள். பல தடவைகளில் கல்முனை போன்ற தொகுதிகளில் தேசிய கட்சிகளின் இரு முஸ்லிம் வேட்பாளர்களுக்கு இடையில் பலத்த போட்டி ஏற்பட்டால், எமது கட்சிக்காரர்கள் தந்தை செல்வாவிடம் வந்து இந்தத் தடவை நாம் தமிழர் ஒருவரை நிறுத்தினால் முஸ்லிம் வாக்குகள் பிரியும்போது தமிழர் வெல்ல வாய்ப்பு உண்டு என்று கூறுவார்களாம். ஆனால் அவரோ அதற்கு ஒருபோதும் இணங்கினதில்லை. அது முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் தொகுதி. வென்றாலும் தோற்றாலும் ஒரு முஸ்லிமையே நிறுத்த வேண்டும் என்று கூறுவார்.

தமிழ் பேசும் மக்களாக ஒன்றாகப் பயணித்தாலும், இரு சமூகங்களினதும் தனித்துவத்தை மதித்து அதற்கு இடமளித்து இணைந்து செய்கிற பயணமாக அது இருக்க வேண்டும். இணைந்து செயற்படுவது அத்தியாவசியம்; ஆனால் அந்த இணைவு பரஸ்பரம் எமது தனி அடையாளங்களை மதித்து அவற்றை வெளிப்படுத்துகிற விதமான அலகுகளையும் நாம் கட்டமைத்துக் கொள்ள வேண்டும்.

தனியான பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசும்போது, வெட்டுப்புள்ளியின் விகிதாசாரத்தை 12.5% இலிருந்து 5% ஆக மாற்றிய பெருமை முற்று முழுதாக பெருந் தலைவர் அஷ்ரவ் அவர்களையேசாரும். அரசுத்தலைவர் பிரேமதாச உடன் பேசி, பெரும் அழுத்தம் கொடுத்து அந்த மாற்றத்தை அரசமைப்பில் ஏற்படுத்தியவர். இது சிறுபான்மைக் கட்சிகளுக்கு மட்டுமல்ல, சென்ற வருடம் வரை சிறு கட்சியாக இருந்த ஜே.வி.பி. இற்கும் பெரும் வரப்பிரசாதமாக இருந்தது. அந்த மாற்றம் ஏற்பட்ட காரணத்தினால் தான் அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வரவே முடிந்தது. அப்படி உள் நுழைந்தமையால்தான் இன்று ஆட்சிபீடம் ஏறக்கூடியதாக இருந்திருக்கிறது. இந்த விடயத்திலும், வேறு பல விடயங்களிலும் அஷ்ரவ் அவர்கள் பெரும்பான்மை சமூகத்தினரோடு பேரம் பேசுவது குறித்து பல பாடங்களை எங்களுக்குப் புகட்டிச் சென்றிருக்கிறார். இது விசேடமாக தமிழ் சமூகம் கவனத்தில் எடுக்க வேண்டிய ஒன்று.

எதிர்காலத்தில் தமிழ் சமூகமோ முஸ்லிம் சமூகமோ இலங்கையில் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் நாம் இணைந்துதான் செயற்பட வேண்டும். அந்த இணைவு எமது தனித்துவ அடையாளங்களை அழித்து விடுவதாக இல்லாமல், அவற்றை உறுதி செய்வதாக இருக்கவேண்டும். இதற்கு, பெருந்தலைவர் அஷ்ரவ் அவர்களினதும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினதும் தீர்க்கதரிசனமான கடந்தகால செயற்பாடுகள் எமக்கு முன்மாதிரியாக இருக்கின்றன. அந்த முன் மாதிரிகளை பின்பற்றினாலேயே தமிழ்-முஸ்லிம் உறவின் மூலமாக எமது இரண்டு சமூகங்களினதும் இருப்பை நாம் உறுதி செய்வது மட்டுமன்றி எம்மை நாமே ஆளக்கூடிய ஆட்சி முறையை இந்த நாட்டுக்குள்ளேயே ஏற்படுத்தலாம் -என்றார்.




# சாத்தியக்கூறு ஆய்வுகளின் பின்னரே ஒலுவில் துறைமுகம் குறித்து முடிவு

புதியசாத்தியக்கூற்றுஆய்வுமேற்கொள்ளப்பட்ட பின்னரே ஒலுவில் துறைமுகம் தொடர்பான எதிர்காலத் தீர்மானம் எடுக்கப்படும் என கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் பிரதியமைச்சர் ரத்ன கமகேவும் கலந்துகொண்டார்.

இதன்போது ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தை இயங்கு நிலைக்குக் கொண்டுவருவது குறித்து இங்கு விரிவாகக்கலந்துரையாடப்பட்டது. உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதால்ஏற்பட்டுள்ளபாதிப்புக்களைச் சரிசெய்வதாயின் புதிய சாத்தியக்கூற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையிலேயே எதிர்காலத் திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்திற்கான மீன்பிடித் துறைமுகமொன்றுக்கான தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், மீன்பிடித் தேவைகளுக்கான ஐஸ் உற்பத்தியை மேற்கொள்ளும் தொழிற்சாலை உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய வகையில் வாழைச்சேனை பகுதியில் மீன்பிடித் துறைமுகத்தை 2026ஆம் ஆண்டு அமைப்பதற்குத்திட்டமிடப்பட்டிருப்பதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தக்கூட்டத்தில்கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மூடப்படவுள்ள அரச நிறுவனங்களின்பட்டியலில்இலங்கைகடற்றொழில் கூட்டுத்தாபனமும் உள்ளதாக வெளியான செய்திகள் பொய் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் ஏனைய பகுதிகளில் காணப்படும் மீனவர்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட அமைச்சின் விடயதானத்திற்கு உட்பட்ட பல விடயங்கள் குறித்தும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# ஒத்துக்கீட்டு சட்ட மூலத்தை சமர்ப்பிப்பதற்கு அனுமதி

2026ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான முழுமையான கால அட்டவணைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இச்சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் 2025 செப்டெம்பர் 8 அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

பிரதமரின் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான வரவு,செலவுத் திட்டம் குறித்த நாடாளுமன்ற அமர்வுகளின் அட்டவணைக்கமைய இந்த சட்டமூலத்தின் முதலாம்வாசிப்பு எதிர்வரும் 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இரண்டாம் வாசிப்பு மற்றும் வரவு,செலவுத் திட்ட உரை நவம்பர் 7ஆம் திகதி நடைபெறும். இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8ஆம் திகதி முதல் நவம்பர் 14ஆம் திகதி வரை ஒரு வார காலத்திற்கு நடைபெறும்.

மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறும். இறுதி வரவு,செலவுத் திட்ட வாக்கெடுப்பு 2025 டிசம்பர் 5ஆம் திகதி இடம்பெறும் என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

# யாழ். பல்லைக்கழகத்திற்கு புதிதாக 5 மாடிக் கட்டம்

## அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கு விரிவுரை மண்டபங்கள், ஆய்வகங்கள் மற்றும் கேட்போர் கூடம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஐந்து மாடிக் கட்டடத்தை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக மதிப்பிடப்பட்ட செலவு 2,234 மில்லியன் ரூபாவாகும் என்று அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. 2006ஆம் ஆண்டு அரச பல்கலைக்கழகங்களில் துணை சுகாதார விஞ்ஞானம் தொடர்பான பட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதன்படி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல் மற்றும் தாதியியல் துறைகளில் மூன்று பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது, இங்கு மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் மற்றும் உடற்கல்வி ஆகிய நான்கு பாடத்துறைகளில் அனைத்து இனங்களையும் சேர்ந்த 952 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான கட்டடத்தை நிர்மாணிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தாலும், நிதி நெருக்கடி காரணமாக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதன் காரணமாக, பீடத்திற்கு மோசமான உட்கட்டமைப்பு வசதிப் பற்றாக்குறை நிலவி வருகிறது.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக, விரிவுரை மண்டபங்கள், ஆய்வகம், ஆய்வுக்கட்டுரை அறை, பரீட்சை மண்டபம் மற்றும் கேட்போர் கூடம் ஆகிய வசதிகளைக் கொண்ட ஒரு புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் மாணவர்களுக்கு சிறந்த கல்விச் சூழலை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.




காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2025இல் வெளியிடப்பெற்றது